Lovc/05 323

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

## சட்டக் கற்கைகள் திணைக்களம்

## சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம்- 2021/2022

## இரண்டாவது தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை

## LLU5709- நிர்வாக சட்டம்

**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி: 13.09.2022** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30**

**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**ஒரு வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

1. ஏவியன் ஏவியேஷன் பிரைவட் லிமிட்டட்டில் விமான அறிவுறுத்துனராக தொழில்புரிந்து வருகின்ற ரஹால் என்பவர் தொழில்முறை ரீதியாக தகுதிபெற்ற வர்த்தக விமான ஓட்டி ஆவார். இவர் விமான பயணவியல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தக விமானம் ஓட்டும் அனுமதிப் பத்திரம் ஒன்றைக் கொண்டுள்ளார். விமான பயணவியல் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் இல.29(3) மற்றும் இல.30 ஆகியவற்றை மீறியமைக்காக ரஹால் உடைய அனுமதிப்பத்திரத்தை பணிப்பாளர் நாயகம் 2022 யூலை 21 ம் திகதியில் இருந்து அமுழுக்கு வரக்கூடிய வகையில் ஒரு வருட காலப்பகுதிக்கு 2022 யூலை 18 ம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் இடைநிறுத்தினார். பணிப்பாளர் நாயகத்தின் இந்த நடவடிக்கை, 2022 யூலை 8 ம் திகதி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடத்தில் எவ்விதமான முறையான அதிகாரமும் இன்றி பாதுகாப்பு குத்துயரத்தின் கீழ் விமானம் ஓட்டியமையின் விளைவாக எடுக்கப்பட்ட ஒன்றாகும். இவ்விடயத்தை விசாரிப்பதற்கு மூவர் அடங்கிய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு 2022 ஓகஸ்ட் 12 ம் திகதி விசாரணையை நடாத்த தீர்மானித்தது.' மேலும் விசாரணைக்கான குற்றப்பத்திரம் விசாரணைக்கு முதல் நாள் ரஹாலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தனது வழக்கிற்கான தயார்ப்படுத்தலுக்காக போதிய கால அவகாசம் இல்லை எனக் கூறி விசாரணையை பிற்போடுமாறு விசாரணைக்குழுவிடம் ரஹால், வேண்டுகோள் விடுத்தான். எனினும் அவனுடைய கோரிக்கையை குழு நிராகரித்தது. சட்ட பிரதிநிதித்துவம் ஒன்றை பெற்றுக்கொள்ள தன்னை அனுமதிக்குமாறும் ரஹால் குழுவிடம் கோரிக்கை விடுத்தான். இக்கோரிக்கையையும் விசாரணைக்குழு மறுத்தது. எனினும் விசாணையின் போது ரஹாலிடம் கேள்விகள் கேட்கப்பட்டதுடன் அவனுடைய வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. விமான பயணவியல் ஒழுங்குவிதிகளின் இல. 30 வது ஏற்பாட்டுடன் முரண்பட்டமைக்காக தனது வழக்கை முன்வைக்க விசாரணைக்குழு அனுமதித்த போதிலும் ஒழுங்குவிதி இல.29(3) தொடர்பாக எவ்விதமான முறைப்பாட்டையும் தனக்கு அறிவிக்கவில்லை என ரஹால் சாடுகின்றான்.

விசாரணைக்குழு நிர்வாக சட்ட எண்ணக்கருக்களின் அடிப்படையில் இவ் விசாரணையை நடத்தியுள்ளதா என அறிவுரையைப் பெற்றுக்கொள்ள ரஹால் உமது ஆலோசனையை நாடுகிறான். ரஹாலுக்கு ஆலோசனை வழங்குக.

2. "பகிரங்க சட்டத்தின் கீழ் முழுமையான அல்லது தடையற்ற தற்றுணிவு ஒன்று இல்லை; பொது மக்களுடைய நம்பிக்கைக்காக அளிக்கப்பட்டுள்ள தற்றுணிவுகள், பொது நன்மைக்காக பயன்படுத்தப்படுவதுடன், அத்தகைய தற்றுணிவைப் பிரயோகிக்கும் தனியுரிமை தற்றுணிவு எதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலம் மதிப்பிடப்படல் வேண்டும்.

*Premachandra vs Major Montage Jayawickrama (1994) 2 SLR90 ,105*

தற்றுணிவு அதிகாரம் மீதான நீதிமுறை கட்டப்பாட்டுடன் தொடர்புறுத்தி இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

*பதிப்புரிமை பெற்றது*